

பாகூரில் தண்ணீர் புகுந்ததால் வீடுகள் மூழ்கி இருப்பதை படத்தில் காணலாம்.

தென்பெண்ணை ஆறு கரைபுரண்டது | புதுவை- கடலூர் சாலை துண்டிப்பு

# பாகூர் உள்பட 20 கிராமங்களை வெள்ளம் சூழ்ந்தது

## மாடிகளில் தஞ்சம்; மூட்டை முடிச்சுகளுடன் பலர் வெளியேறினர்

பாகூர், டிச.3-

தென்பெண்ணை ஆற்றில் கரைபுரண்டு ஓடும் வெள்ளத்தால் கடலூர்-புதுச்சேரி சாலை துண்டிக்கப்பட்டது. பாகூர் உள்பட 20 கிராமங்கள் தீவாக மாறின. மூட்டை முடிச்சுகளுடன் மக்கள் வெளியேறினர்.



பாகூரில் இருந்து சித்தேரி அணைக்கு செல்லும் பாதையில் கட்டையால் தடுப்பு வைக்கப்பட்டுள்ளதை படத்தில் காணலாம்.

### சாத்தனூர் அணை திறப்பு

பெஞ்ஜல் புயல் மழை தமிழகம் மற்றும் புதுச்சேரியில் கடும் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது. புதுவை மற்றும் விழுப்புரம் பகுதிகளில் வரலாறு காணாத அளவில் 50 செ.மீ.க்கு மேல் மழை கொட்டித்தீர்த்தது.

இதன் காரணமாக புதுவை நகர பகுதி மற்றும் கிராமப்புறங்கள் வெள்ளக்காடானது. தற்போது இந்த தண்ணீர் வடிந்து வருவதால் மக்கள் நிம்மதி அடைந்துள்ளனர்.

ஆனால், திருவண்ணாமலை மாவட்டத்தில் மழை வெளுத்து வாங்கியதால் அங்குள்ள சாத்தனூர் அணை வேகமாக நிரம்பியது. இதையடுத்து அணையின் பாதுகாப்பு கருதி வினாடிக்கு 1 லட்சத்துக்கும் அதிகமான கன அடி தண்ணீர் தென்பெண்ணை ஆற்றில் திறக்கப்பட்டது. இதனால் ஆற்றில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

ஆற்றின் இருகரைகளை தொட்டபடி வெள்ளம் ஆர்ப்பரித்து செல்கிறது. இந்த வெள்ளத்தால் திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், மற்றும் புதுச்சேரிக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

### கிராமங்களை சூழ்ந்த வெள்ளம்

புதுவை மாநிலத்தில் பாகூர் அருகே இரண்டாயிர விளாகம், சித்தேரி அணைக்கட்டு, கொம்மந்தான்மேடு, மணமேடு ஆகிய தடுப்பணைகள் மூழ்கி சுமார் 10 அடி உயரத்திற்கு தண்ணீர் பாய்ந்து செல்கிறது.

கரையோரம் தாழ்வான பகுதியான ஆராய்ச்சிகுப்பம், கொம்மந்தான்மேடு, சோரியாங்குப்பம், குருவிநத்தம், இருளஞ்சந்தை, திருப்பனாம்பாக்கம், இரண்டாயிரவிளாகம், பரிக்கல்பட்டு உள்ளிட்ட 20 கிராமங்களில் வெள்ளம் புகுந்துள்ளது.

பாகூரில் மாரி நகர், காமராஜர் நகர், பாகூர்பேட், கூட்டுறவு நகர், பத்மினி நகர் பகுதியிலும். தமிழக பகுதியான அழகியநத்தம், சுரைமேடு, உள்ளேரிப்பட்டு ஆகிய கிராமங்களிலும் வெள்ளம் சூழ்ந்து அந்த பகுதி முழுவதும் தீவாக மாறின.

### வீட்டு மாடிகளில் தஞ்சம்

நேரம் செல்லச்செல்ல ஆற்றில் நீர்மட்டம் உயர்ந்து கொண்டே வருவதால், வெள்ளத்தில் இருந்து தப்பிக்க பலர் தங்கள் வீடுகளை மூடிவிட்டு மாடிகளில் தஞ்சம் அடைந்துள்ளனர். சிலர் மூட்டை முடிச்சுகளுடன் அங்கிருந்து வெளியேறி அருகில் உள்ள உறவினர் மற்றும் நண்பர்கள் வீடுகளுக்கு சென்றனர். தாழ்வான பகுதியில் உள்ள வீடுகளில் வெள்ளம் சூழ்ந்து வெளியே வர முடியாமல் தவித்த ஏராளமானோர் மீட்புக் குழுவினரால் மீட்கப்பட்டு பள்ளிக்கூடங்கள், சமுதாய நலக்கூடங்கள். அரசு கட்டிடங்களில் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 2021-ம் ஆண்டு நவம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளம் போல் தற்போதும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதாக மக்கள் தெரிவித்தனர்.

### போக்குவரத்து துண்டிப்பு

ஆற்றில் பாய்ந்து வந்த வெள்ளத்தால் பாகூர் ஏரிக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. புதுச்சேரி - கடலூர் சாலையில் கங்கனாங்குப்பத்தில் ஆற்று வெள்ளம் சூழ்ந்துள்ளதால் வாகனங்கள் செல்ல முடியவில்லை. இதனால் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

புதுச்சேரியில் இருந்து கடலூர் செல்லும் வாகனங்கள் கன்னியக்கோவில்- பாகூர் சாலையில் சென்று, விழுப்புரம்- நாகை புறவழிச்சாலை மார்க்கமாக திருப்பி விடப்பட்டுள்ளன.

தேசிய பேரிடர் மீட்பு குழுவினர், பாகூர் தீயணைப்புப் படையினர் மற்றும் போலீசார் இணைந்து மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

### கவர்னர் ஆய்வு

இந்த நிலையில் புதுவை கவர்னர் கைலாஷ்நாதன், அமைச்சர் லட்சுமிநாராயணன், கலெக்டர் குலோத்துங்கன் ஆகியோர் பாகூர் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்து ஆறுதல் கூறி, மீட்பு பணிகளை துரிதப்படுத்தினர். பாகூர் எம்.எல்.ஏ. செந்தில்குமாரும் தொகுதியில் முகாமிட்டு மீட்பு பணிகளை மேற்கொண்டு, மக்களுக்கு தேவையான உணவு பொருட்கள் வழங்கி வருகிறார்.

### 1.68 லட்சம் கனஅடி தண்ணீர் வெளியேற்றம்

வங்க கடலில் உருவாகி புதுச்சேரி அருகே கரையை கடந்த பெஞ்ஜல் புயலால் திருவண்ணாமலை, தர்மபுரி, கிருஷ்ணகிரி, கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களில் கடந்த 3 நாட்கள் தொடர்ந்து கனமழை பெய்தது. அதனால் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள சாத்தனூர் அணைக்கு வரும் தென்பெண்ணை ஆற்றில் நீர்வரத்து அதிகரிக்க தொடங்கியது.

நேற்று முன்தினம் மாலை அணையில் இருந்து வினாடிக்கு 30 ஆயிரம் கன அடி உபரிநீர் திறந்து விடப்பட்டது. இந்த நிலையில் நள்ளிரவில் திடீரென நீர்வரத்து மேலும் அதிகரித்தது. அதாவது சாத்தனூர் அணைக்கு ஒரு லட்சத்து 68 ஆயிரம் கன அடி தண்ணீர் வரத்தொடங்கியது. அதனால் அணையின் நீர்மட்டம் 118.95 அடியை (மொத்த உயரம் 119 அடி) எட்டியது.

அணையை கண்காணிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த பொதுப்பணித்துறை அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் உடனடியாக வினாடிக்கு ஒரு லட்சத்து 68 ஆயிரம் கன அடி நீரையும் கண்மாய், 9 கண் மதகுகள் வழியாகவும் தென்பெண்ணை ஆற்றில் வெளியேற்றினர். இதனால் ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது.

தினமலர் - 3/12/2024